ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1907/73 - 2015 මාර්තු මස 28 වැනි සෙනසුරාදා - 2015.03.28
*1907/73 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி சனிக்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ் ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*கிழக்கு மாகாண சபை உறுப்பினரொருவராக நியமனம் பெற்றதன் காரணமாக ஏறாவூர் நகர சபையின் தவிசாளரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) ஆம் பிரிவின் கீழ், அலிஷாகிர் மௌலானா செய்யத் என்னும் பதவி வகித்த தவிசாளர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான ஏறாவூர் நகர சபையின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. முகம்மட் இஸ்மாயில் முகம்மட் தஸ்லீம் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது ஏறாவூர் நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அப்துல் மஜிது மஹம்மது கபீர் ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. முகம்மட் இஸ்மாயில் முகம்மட் தஸ்லீம் என்பவர், ஏறாவூர் நகர சபையின் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

ஏ. எம். எம். கபீர்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
ஏறாவூர் நகர சபை.

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*மட்டக்களப்பு,*
*2015, மாச்சு 27.*

*4 - 458*

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், புத்தளம் நகர சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*கேட்டு விலகியமை காரணமாக புத்தளம் நகர சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகி உள்ளதாதலாலும் ;*

*2007 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 65 அ (2) ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு திரு. எஸ். ஆர். எம். எம். முஹுசி என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த சுயேச்சைக் குழு இலக்கம் 08 இன் குழுத்தலைவருக்கு முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் புத்தளம் நகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ், தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடைய ஆளொருவராக திரு. மொஹமட் ரிஸ்வான் சாபார் என்பவர் மேற்குறித்த குழுவின் தலைவரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளாராதலாலும் ;*

*இப்போது புத்தளம் நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பாக்கியராஜா ரகுநாதன் ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) (ஆ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. மொஹமட் ரிஸ்வான் சாபார் என்பவர் புத்தளம் நகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*பாக்கியராஜா ரகுநாதன்,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*புத்தளம் நகர சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*புத்தளம்,*
*2015, மாச்சு 27.*

*4- 459*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*